## கலைஞர் விதைத்த விதைகளும் – மு.க.ஸ்டாலினின் அறத்தின் அரசியலுமே – இன்றைய தமிழ்நாட்டின் மேன்மைக்குக் காரணங்கள்!

# தமிழ்நாட்டைப் பொற்காலமாக மாற்றியது, தளபதி மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சி!

### சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னின்று நடத்திய

## ‘முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில்’ நடிகர் சத்யராஜ் புகழாரம்!

*சென்னை, ஜுன் 10-*

**கலைஞர் விதைத்த விதைகளும் - மு.க.ஸ்டாலினின் அறத்தின் அரசியலுமே - இன்றைய தமிழ்நாட்டின் மேன்மைக்குக் காரணங்கள்! என்றும், தமிழ்நாட்டைப் பொற்காலமாக மாற்றியது, தளபதி மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சி! என்றும், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் - மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னின்று நடத்திய ‘முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில்’ நடிகர் சத்யராஜ் புகழாரம் சூட்டினார்.**

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

என்னுடைய அன்புத் தம்பி செயல் வீரர் சேகர்பாபு அவர்கள் கட்டுப்பாட்டில்தான் பல பகுதிகள் உள்ளன. இன்றைக்கும் அவர்தான் இங்கே தலைவர். “தம்பி, எந்தப் பகுதி?” என்று கேட்டேன். “கொளத்தூர்” என்றார். அதனால் என்னுடைய உரையை இப்படி ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறேன். கொளத்தூரில் பேசுவதனால் முதல் கேள்வி: நியாயமா? நீங்கள் செய்தது நியாயமா?

**பொன்வண்ணனின் உரைக்கு மறுமொழியும் 108 சட்டமன்ற உறுப்பினர்களின் அறிவும்**

என்னுடைய தம்பி பொன்வண்ணன் அவர்கள் ஒரு பெரிய அரசியல் வரலாற்றைப் பேசினார். தம்பி பொன்வண்ணன் அவர்களே, நீங்கள் பேசினீர்களே மனித குலத்தின் வரலாறு... எப்பொழுது மனிதன் ஆரம்பித்தான்? எப்படிக் கடல் வழியில் போனான், எப்படி வந்தான்? 1920-இல் எப்படி இரட்டை ஆட்சி முறை வந்தது? முதன்முதலில் நீதிக்கட்சி வந்தது... இதெல்லாம் உங்களுக்குப் புதிதாக இருக்கலாம், எனக்கு ரொம்பப் பழசு. ஏனென்றால், இப்போது 108 எம்.எல்.ஏ.க்கள் வென்றிருக்கிறார்கள் அல்லவா... அவர்களிடத்தில் நான் கேட்டுத் தெரிந்துகொண்டேன். பெரிய அறிவுப் பெட்டகம்!

நீங்கள் பேசியது கம்மிதான், அவர்களுக்கு முன்னாடி இதெல்லாம் ஒன்றுமே இல்லை. நீங்கள் அங்கே பேசினீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்களேன், ‘வால்காவிலிருந்து கங்கை வரை’ பேசுவார்கள். எனக்கு என்னவென்றால், தம்பி பொன்வண்ணன் பேசியது அந்த 108 எம்.எல்.ஏ.க்களுடைய அறிவிற்கு முன்னாடி இது ‘ஜுஜுபி’, ஒண்ணுமே கிடையாது. அவர்களெல்லாம் பெரிய ஆட்கள். பெரியார் களஞ்சியம் என்றெல்லாம் புத்தகம் வந்திருக்கிறது அல்லவா... அந்தப் புத்தகத்தில் இருப்பதைத் தாண்டி அவர்களெல்லாம் பெரிய களஞ்சியம்! அதை நிரூபித்துக்கொண்டே இருக்கிறார்கள். ஒரு அமைச்சருக்கு அவருடைய துறையே எது என்று தெரியவில்லை! என்னத்தை பண்றது? காமெடிதான்!

1967-இல்தான் முதன்முறையாகத் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகிறது. அதற்கு முன்னாடி காங்கிரஸ் கட்சிதான் ஆட்சியில் இருந்தது. அது எனக்குத் தெரியும், தம்பி பொன்வண்ணனுக்குத் தெரியும். அது ஒரு பண்ணையார் கட்சி. என் மாமன், மச்சானெல்லாம் மிட்டாமிராசு, பண்ணையார்கள், ஜமீன்தார்கள்; அவர்களெல்லாம்தான் காங்கிரஸ் கட்சியில் அமைச்சராக இருப்பார்கள். அப்படித்தான் இருந்தது அந்தக் காங்கிரஸ் கட்சி. அது என் வயதுக்காரர்களுக்குத்தான் தெரியும்.

1967-க்கு முன்னாடி இந்த நாட்டில் நடந்து கொண்டிருந்தது, அந்த மாதிரிப் பணக்காரர்களுடைய ஆட்சிதான். ஏழைப் பங்காளனாகப் பெருந்தலைவர் காமராஜர் இருந்தார்; ஆனால், அதிகாரத்தில் இருந்தவர்கள் எல்லாம் பெரிய பெரிய பணக்காரர்கள்.

**முதல்வர் நாற்காலியில் அண்ணா அமர்ந்தார் – தமிழ்நாடு நிமிர்ந்தது**

முதல்முறையாக 1967-இல் பேரறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததுக்கு அப்புறம்தான் தமிழ்நாடு நிமிர்ந்தது. அதை ஒருத்தர் பதிவு போட்டிருந்தார், ‘முதலமைச்சர் நாற்காலியில் அண்ணா அமர்ந்தார், தமிழ்நாடு நிமிர்ந்தது’ என்று. அவர் ஒரு வருடத்திலேயே நம்மை விட்டுப் போய் விட்டார்.

அதற்குப்பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வருகிறார். அவ்வாறு ஆட்சிக்கு வந்து 1977 வரைக்கும் ஒன்பது ஆண்டுகால ஆட்சியில் கலைஞர் விதைத்த விதைகள்தான், இன்று தமிழ்நாட்டை வளமாக்கி, அறுவடையாக்கி, தமிழ்நாட்டை எங்கேயோ கொண்டு போய் வைத்திருக்கிறது. அதை அப்படியே செயல்படுத்திக் காட்டியவர் நம்முடைய முதல்வர் ஸ்டாலின் அவர்கள். முதல்வர்தான், எங்களுக்கு அவர்தான் முதல்வர்! அன்பின் முதல்வர், பண்பின் முதல்வர், பெருந்தன்மையின் முதல்வர். சொன்னார் அல்லவா சட்டசபையில், “கரூரில் 41 பேர் இறந்திருக்கிறார்கள் என்றால், எந்தக் கட்சிக்காரரும் தன் சொந்தக் கட்சிக்காரர் சாக வேண்டும் என்று ஆசைப்பட மாட்டார்; அதை அரசியல் ஆக்காதீர்கள். அந்த வழக்கு நீதிமன்றத்திற்குப் போய்விட்டது; சிபிஐ-க்கு போய்விட்டது. தயவுசெய்து அதை வைத்து அரசியல் ஆதாயம் தேட வேண்டாம்” என்று சொன்னார் இல்லையா... அவர் முதல்வர்! பெருந்தன்மையின் முதல்வர், அறத்தின் முதல்வர். அப்படிப்பட்ட முதல்வர்தான் இன்றும் எனக்கு முதல்வர்.

தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கும் போதும் சரி, எதிர்க்கட்சியாக இருக்கும் போதும் சரி... 2020-க்கு முன்பே என்னுடைய அன்புத் தம்பி சேகர்பாபு கலைஞருடைய பிறந்தநாள் விழாவிற்கு என்னை அழைப்பார். பெரியார் திடலுக்கு நான் வந்திருக்கிறேன். அதற்குப்பிறகு, ஒரு முறை நம்முடைய தலைவர் ஸ்டாலின் அவர்களுடைய பிறந்தநாளுக்கு அழைத்தபோது நான் சொன்னேன், “தம்பி, கலைஞர் அவர்கள் வசனத்தில் நான் இரண்டு படம் நடித்திருக்கிறேன்; கலைஞர் இப்போது நம்மிடம் இல்லை, இப்போது அவர் பொதுவானவர் ஆகிவிட்டார். அதனால் வருவது சரி. நான் தலைவர் ஸ்டாலின் பிறந்தநாளுக்கு வந்தால், நான் தி.மு.க. அனுதாபிதான், நான் கிட்டத்தட்ட தி.மு.க.காரனாகவே ஆகிவிடுவேன் தம்பி, அது எனக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது” என்றேன்.

இப்போது இந்த மேடைக்கு வரும்போது, தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கும்போது வந்ததைவிட மிகவும் ‘கெத்தாக’ வந்திருக்கிறேன். ஏனென்றால், ஆளுங்கட்சியாக இருக்கும்போது வந்தால் ‘காக்கா பிடிக்க’ வந்திருக்கிறான் என்று சொல்வார்கள். அய்யய்யோ இது வேற... நம்முடைய சூப்பர் ஸ்டார் ரஜினி சார் ஒரு காக்கா, கழுகு கதை சொன்னார் அல்லவா... அந்தக் காக்கா இல்லை! காக்கா பிடிப்பது என்றால், ‘ஐஸ் வைப்பது’. அந்தக் காக்கா என்று நினைத்துக் கொள்ளாதீர்கள், காக்கா பிடிக்க வந்திருக்கிறான் என்று சொல்வார்கள். இப்போது எதிர்க்கட்சியாக இருக்கும்போது வரும்போதுதான் தம்பி எனக்கு ரொம்பப் பெருமையாக இருக்கிறது.

நான் பெரியாருடைய தொண்டன், அதனால் திராவிடக் கருத்தியல் ஆதரவாளன். நான் எந்தக் கட்சியிலும் உறுப்பினர் இல்லை. இருந்தாலும்கூட, எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், அந்தக் கட்சியில் நல்ல நலத்திட்டங்கள் நடக்கும்போது போவேன். அதுமாதிரி முதல்வர் ஸ்டாலின் அவர்களுடைய பிறந்த நாளுக்குத் தம்பி சேகர் பாபு அவர்கள் பல நலத்திட்டங்கள் அறிவிப்பார், “அதை வழங்கிவிட்டுச் செல்லுங்கள் அண்ணா, மற்றபடி இது அரசியல் இல்லை” என்று சொல்லி அழைப்பார், வருவேன்.

வரும்போதுகூட ஒரு தயக்கம் இருக்கும், “என்னடா, நாம் ஆளுங்கட்சிக்குப் போய் ஜால்ரா அடிக்கிறோமோ” என்று. ஆனால் ஐந்து வருடங்களாக சேகர் பாபு தம்பி கூப்பிட்டபோதெல்லாம் நான் வந்ததற்குக் காரணம், தலைவர் ஸ்டாலின் அவர்களுடைய செயல்பாடுகள்தான்; அவருடைய வளர்ச்சித் திட்டங்கள்தான்; அவருடைய நலத்திட்டங்கள்தான். ஆளுங்கட்சியாக இருக்கும்போது தயங்கித் தயங்கி வந்த நான், இப்போது சொல்கிறேன், “ஒரு தி.மு.க. அனுதாபியாக வந்துவிட்டுச் சென்றேன் தம்பி. ஏனென்றால் நல்ல நல்ல விஷயங்கள் எல்லாரும் செய்கிறீர்கள் என்பதற்காக... இப்போது சொல்கிறேன் தம்பி, நான் தி.மு.க.தான்!

எனக்குக் கொளத்தூரில் தலைவர் தோற்றது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. நான், மிகவும் கிண்டலான நக்கல் பிடித்த ஆள், என்னை சினிமாவில் பார்த்திருப்பீர்கள்; எல்லாத்தையும் விளையாட்டாக எடுத்துக் கொள்வேன். இதை அப்படி எடுத்துக்கொள்ள முடியவில்லை. சரி, பட்டுத் திருந்தினால்தான் புத்தி வரும். படுங்கள், படுங்கள்; பட்டுத் திருந்துங்கள், அப்போதுதான் புத்தி வரும். இப்படிப்பட்ட தலைவரைத் தோற்கடித்திருக்கிறோம்.

முதல்வருக்கு உதாரணமாக இருந்தவர், அண்ணா; கலைஞர் வழியில் ஸ்டாலின் அவர்கள். ஒரு முதல்வர் பேசுகிற பேச்சா இது? “வாயில் நன்றாக வரும்” என்று. எனக்கும்தான் நன்றாக வரும், நன்றாக நன்றாக வரும்; எவ்வளவு வேண்டுமானாலும் நன்றாக வரும். இன்ஸ்டாகிராமில் இருக்கும் ‘வாரியர்ஸ் வெங்காயம்’ எல்லாம், என்னை திட்டுவார்கள்; கவலையே படமாட்டேன். இங்கே புடுங்கி வீசுவதற்கு ஒன்றும் இல்லை; இங்கிருந்து புடுங்கி வீசிவிட்டுப் போய்விடுவேன். தேவை என்றால் சொல்லுங்கள், எனக்கு நிறையக் கெட்ட வார்த்தைகள் தெரியும். நான் மரியாதையாக இதையெல்லாம் அமுக்கி வைத்திருக்கிறேன். உங்களுக்கு ஏதாச்சும் தேவை என்றால், நான் நிறைய எடுத்துக் கொடுக்கிறேன்.



**‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைகளும் புதிய அரசுக்கு அறிவுரையும்**

இந்தத் தமிழ்நாட்டைப் பொற்காலமாக மாற்றியது ‘திராவிட மாடல்’ ஆட்சிதான். பெண்களுக்குச் சொத்தில் சமவுரிமை கொண்டு வந்தாரே தலைவர் கலைஞர், அதைவிடவா? அவர் கொண்டு வந்த அத்தனை சட்டத்தையும் வழி நடத்தி முன்னாடி கொண்டு வந்தாரே நம்முடைய தலைவர் ஸ்டாலின் அவர்கள், அதைவிடவா?

இப்போது ஆட்சியில் இருக்கிறவர்களுக்கு நான் ஒரே ஒரு அறிவுரை சொல்கிறேன். நீங்கள் ஒன்றுமே பண்ண வேண்டாம்; ஸ்டாலின் அவர்கள் செய்த நலத்திட்டங்களுக்குப் பெயரை மட்டும் மாற்றி, ‘ஸ்டிக்கரை’ மாற்றிவிடுங்கள், உங்களுக்கு நல்ல பெயர் கிடைத்துவிடும்! ‘நான் முதல்வன்’ திட்டமா... வேறு ஏதாவது பெயர் வைத்துக் கொள்ளுங்கள்; ‘விடியல் பயணம்’ திட்டமா... வேறு பெயர் வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பெயரை மட்டும் மாற்றினீர்கள் என்றாலே உங்களுக்கு நல்ல பெயர் வந்துவிடும். ஆனால், அவர் கொண்டு வந்த நலத்திட்டத்தையும் வளர்ச்சித் திட்டத்தையும் மாற்றினீர்கள் என்றால் சரிப்பட்டு வராது, கண்டிப்பாகச் சரிப்பட்டு வராது.

என்னவென்றால், ஒரு சினிமா மோகம் இருக்கும்; நானும் சினிமா நடிகன்தான். சினிமாவில் கவர்ச்சியெல்லாம் இருக்க வேண்டியதுதான், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், நாம் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நமக்கு ஒரு மாற்றம் வேண்டும் என்றால், என்ன மாதிரியான மாற்றம் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

**சமூகநீதிக்கு நேர்மாறான கருத்தியல்!**

இப்போது நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். இப்போது கொள்கை ரீதியாக ஒரு மாற்றம் வேண்டுமா என்றால்... திராவிடக் கருத்தியலான சமூக நீதிக்கு நேர் மாறான ஒரு கருத்தியல் ஆர்.எஸ்.எஸ். - பி.ஜே.பி.-யின் சனாதனம். உங்களுக்கு இது பிடிக்கவில்லையா, அங்கே ஓட்டுப் போட்டுவிடுங்கள். கருத்தியல் ரீதியாக இதைவிட இன்னும் வேகமாக ஒன்று வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா... கம்யூனிஸ்ட் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வந்து அவர்களை முதலமைச்சர் ஆக்குங்கள், தவறே கிடையாது. விடுதலையிலேயே மிக முக்கியமான விடுதலை வந்து பட்டியல் இனத்தவர்களுடைய விடுதலை என்கிறீர்களா... விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை வெற்றி பெற வையுங்கள். என்ன மாற்றம் இருக்கிறது?

தமிழ்நாடு முதல்வர், என்னுடைய அன்புத் தம்பி விஜய் அவர்கள் கட்சி ஆரம்பிக்கும்போதே என்ன சொன்னார், “என்னுடைய கொள்கைத் தலைவர்கள் பெரியார், அம்பேத்கர்; திராவிட மும், தமிழ் தேசியமும் எனது இரண்டு கண்கள்” என்றார். அப்போது அது தி.மு.க. தானே. தி.மு.க., அண்ணா தி.மு.க., அது எல்லாம் ஒன்றுதான். தலைவர்கள், நபர்கள் மட்டும்தான் மாறுகிறார்கள். அந்தத் தலைவர்களும், நபர்களும் மாறும்போது நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டாமா, ஸ்டாலின் என்னென்ன செய்தார் என்று!

**கேள்வி கேட்டுப் பழகுங்கள்!**

நிச்சயமாக எல்லாக் கட்சியிலும் ஒரு குறை இருக்கும், விமர்சனம் இருக்கும். ஆனால், அதற்காக நீங்கள் என்ன பண்ணுவீர்கள், எங்கேயோ கொண்டுபோய் ஓட்டைப் போட்டுவிடுவீர்களா? ஒரு அப்பாவுக்கும் மகனுக்கும் நடுவில் கருத்து வேறுபாடு இருக்கிறது, “அப்பா என்ன இப்படி பண்ணிவிட்டார்” என்று மகன் சொல்வான், “மகன் சரியில்லை” என்று அப்பா சொல்வார்; கணவன் மனைவிக்கு நடுவில் கருத்து வேறுபாடு இருக்கிறது; அண்ணன் தம்பிக்கு நடுவில் கருத்து வேறுபாடு இருக்கிறது; இரண்டு நண்பர்களுக்கு நடுவில் கருத்து வேறுபாடு இருக்கும். அதுபோன்று, ஐந்து வருடம் ஆட்சியில் இருப்பவர்கள் மேல் ஒரு கருத்து வேறுபாடு இருக்கும், விமர்சனம் இருக்கும், குறைகள் தெரியும். ஆனால், அதை நிவர்த்தி செய்யும் ஒருவருக்கு ஓட்டுப் போடுகிறோமா என்று நாம் யோசிக்க வேண்டாமா? சரி, போட்டு விட்டீர்கள். இனிமேலாவது கேள்வி கேட்டுப் பழகுங்கள். பெரியார் நமக்குச் சொல்லிக் கொடுத்தது, அண்ணல் அம்பேத்கர் சொல்லிக் கொடுத்தது, காரல் மார்க்ஸ் சொல்லிக் கொடுத்தது, “ஏன் என்ற கேள்வி கேளுங்கள்” என்பதுதான்.

**சட்டமன்றத்தில் உதயநிதியின் ஆளுமையும் ‘பராசக்தி’ நினைவுகளும்**

இன்றைக்கு ரீல்ஸில், காமெடியாக போடுவார்கள், எதையோ திட்டுவார்கள்; அதற்கெல்லாம் நாம் பதில் சொல்லணும். ஆனால், இப்போது எனக்கு என்ன பெரிய மகிழ்ச்சி என்றால், அங்கே சட்டசபையிலே எதிர்வரிசையில் உட்கார்ந்திருக்கிறார் பாருங்கள் நம்முடைய தம்பி உதயநிதி! அய்யய்யோ... ‘நோண்டி நொங்கு எடுத்துவிடுவார்கள்’ என்று சொல்வார்கள் அல்லவா? ‘கிழி கிழி’ என்று கிழித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் இரண்டு பேரும் நண்பர்கள்தானே? சினிமாவில் ஒன்றாகத்தானே இருந்தீர்கள்? முதலிலேயே போன் பண்ணிச் சொல்ல வேண்டாமா, “நாளைக்கு நான் இந்தக் கேள்வியெல்லாம் கேட்கப் போறேன்” என்று? அவர் ஏதாவது பதில் தயாரித்துக் கொண்டு வருவார். தடாலென்று சட்டசபையில் எழுந்து ஒரு கேள்வி கேட்டீர்கள் என்றால், அவர் எப்படிப் பதில் சொல்வார்? போய் ட்விட்டரில்தான் பதில் சொல்லி ஆக வேண்டும், வேறு வழி இல்லை.

நாம் சில இடங்களில் அமைதியாக இருப்போம்; சில இடங்களில் ஆக்ரோஷமாகப் பேசுவோம். அதுமாதிரி நாம் சில இடங்களில் அமைதியாக இருந்து கொள்கிறோம்; அந்த அமைதியாக இருக்கிற இடம் வந்து சட்டசபை, நன்றி தெரிவிக்கப் போன இடத்தில் ஆக்ரோஷமாகப் பேசுவது.

எப்படிப்பட்ட தலைவர் பாருங்கள், கொளத்தூரில் தோற்றுவிட்டார். நான் அடுத்த நாள் தலைவருக்குப் போன் செய்கிறேன்; எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை, “என்னங்க இப்படி...” என்றதும், அவர் “அதை விடுங்கள், நான் இப்போது நன்றி சொல்வதற்காகப் போய்க் கொண்டிருக்கிறேன்” என்கிறார். நன்றி தெரிவிக்கிற கூட்டத்தில் மக்கள் அத்தனை பேரும் அழுகிறார்கள். அவருடைய தொகுதியில் மட்டுமல்ல; அன்பில் மகேஷ் போகிற இடத்தில், தம்பி தமிழன் பிரசன்னா போகிற இடத்தில்... எங்கே, எப்படி, என்ன, எப்படி ‘ஸ்லிப்’ ஆனது என்று தெரியவில்லை, ஆகிவிட்டது.

‘பராசக்தி’ படம் பார்த்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள் என்று தெரியாது. நடிகர் திலகம் சிவாஜி அவர்கள், ரங்கூனிலிருந்து தன்னுடைய தங்கச்சியைப் பார்ப்பதற்காகச் சென்னைக்கு வருவார். அவ்வாறு வந்த இடத்தில் வம்பு செய்து, அவர் ஒரு கவர்ச்சி நடனத்திற்கு கூப்பிட்டுப் போய், “ஓ ரசிக்கும் சீமானே வா...”. கலைஞர்தான் அந்தப் பாட்டு எழுதினார் என்று நினைக்கிறேன். நடிகர் திலகம் ரங்கூனிலிருந்து வரும்போது அவருடைய பர்ஸை ‘பிக்பாக்கெட்’ அடித்துக் கொண்டு போய்விடுவார்கள், சோற்றுக்கே வழி இருக்காது. அப்போதான் தலைவர் கலைஞர் வசனம்:

“காண வந்த தங்கையைக் கண்டேன், கண்ணற்ற ஓவியமாக! ஆம், கைம்பெண்ணாக! தங்கையின் பெயரோ கல்யாணி, ஆனால் கழுத்தில் மாங்கல்யம் இல்லை! செழித்து வாழ்ந்த குடும்பம் சீரழிந்து விட்டது; கண்ணிலே நீர், கையிலே பிள்ளை, கல்யாணி அலைந்தாள்... கல்யாணிக்காக நான் அலைந்தேன்!” என்று சிவாஜி சார் பேசுவார். அந்த மாதிரி எங்கேயோ கவர்ச்சி நடனம் பார்க்கப் போய், இருப்பதை எல்லாம் அடித்துக்கொண்டு போய் விட்டார்கள். இது மறுபடியும் ‘ரிவைவ்’ ஆகுவதற்கு, மறுபடியும் தி.மு.க. ஆட்சி வந்துதான் சரிபண்ணணும்.

**இக்கிகை தத்துவமும் உதய சூரியனின் மீள் எழுச்சியும்**

அநேகமாக, நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சராக திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில்தான் கலைஞரின் 104-வது பிறந்த நாள் நடக்கும் என்று நினைக்கிறேன், நடக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதுதான் தமிழ்நாட்டுக்கு நல்லது. இப்போது தலைவர் ஸ்டாலின் அவர்கள் வெற்றி வாய்ப்பை இழந்தது என்பது, நன்றாக யோசித்துப்பார்த்தால், அது அவருக்கு நல்லது; கொஞ்சம் ஓய்வு எடுக்க முடியும், நன்றாக உடற்பயிற்சிகள் செய்ய முடியும், மனதை நன்றாக இன்னும் தேற்றிக்கொண்டு... ஒரு ஓய்வுதானே! ஆனால், அவருக்கு அது ஓய்வு கிடையாது, உழைப்புதான் ஓய்வு. உழைப்புதான் ஸ்டாலின் அவர்களுக்கு ஓய்வு.

‘இக்கிகை’ என்று ஒரு ஜப்பான் தத்துவத்தை நீங்கள் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன் தம்பி பொன்வண்ணன் அவர்களே... ஜப்பானில் ‘ஒகினாவா’ என்ற கிராமத்தில் 100 வயதிற்கு மேல் வாழ்வார்கள். அதற்கு என்ன காரணம் என்றால், அவர்கள் எல்லாம் சமூகத்திற்கு ஏதோ ஒரு சேவை செய்துகொண்டே இருப்பார்கள். அதனால்தான், தந்தை பெரியார் 95 வயது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 95 வயது, நல்லகண்ணு ஐயா 102 வயது, சங்கரைய்யா அவர்கள் 101 வயதையும் கடந்து... அதுமாதிரி சேவை மனப்பான்மை இருக்கிற நம்முடைய முதல்வர், அன்பின் முதல்வர், பண்பின் முதல்வர், நாகரிகத்திற்கு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் கண்டிப்பா நிச்சயமாக ஆட்சிக்கு வருவார். ஏனென்றால், நமக்கு வெயிலில் போனால்தான் நிழலின் அருமை தெரியும். நிழல் வரவேண்டும் என்றாலும்கூட உதயசூரியன் உதிக்கும் போதுதான் வரும். நிச்சயமாக உதயசூரியன் உதிக்கும்!

**சூரியன் மீண்டும் உதயமாகும்!**

நான் எம்.ஜி.ஆர். ரசிகன். அடிக்கடி அவருடைய வசனத்தைப் பேசுவேன். ‘ஆயிரத்தில் ஒருவன்’ படத்தில் வில்லன் மனோகர் எம்.ஜி.ஆரைப் பார்த்துச் சொல்லுவார், “நீ அணையும் விளக்கு, அஸ்தமிக்கும் சூரியன்!” என்பார். எம்.ஜி.ஆர். திருப்பிச் சொல்லுவார், “அஸ்தமிக்கும் சூரியன் அடுத்த நாளே மீண்டும் உதயமாகும்!” என்பார். ஞாபகம் இருக்கிறதா ஆயிரத்தில் ஒருவன் பார்த்தவர்களுக்கு? கப்பலில் பேசுவார் மனோகரிடத்தில்; வெள்ளை நிறச் சட்டை, சிவப்பு நிறக் காலர், சிவப்பு நிற பெல்ட், சிவப்பு நிற ஷு... போட்டு அடிப்பார் பார்த்தீர்களா?

அந்த மாதிரி சூரியன் அஸ்தமிப்பதே இல்லை; நம்முடைய சுழற்சியின் காரணமாக இருட்டு வருகிறதே ஒழிய, சூரியன் அப்படியேதான் இருக்கிறது. உலகம் சுற்றும்போது நமக்கு இருட்டு வருகிற மாதிரி இருக்கிறது; சூரியன் நிரந்தரமானது, அதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். எனவே, இந்தச் சூரியன் மீண்டும் உதயமாகும், உதயமாகும்! ஏனென்றால் அது அஸ்தமிக்கவே இல்லை, அதுதான் இயற்கை என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு நடிகர் சத்யராஜ் அவர்கள் உரையாற்றினார்.